In the Court of District Munsif-cum-Judicial Magistrate, Kilpennathur

# O.S. 67/2024

Examination of - PW1

| | | |
|---|---|---|
| **Name** | : | ஏழுமலை |
| **Father Name** | : | கோவிந்தராஜ் |
| **Village** | : | கொளத்தூர் மதுரா பொன்னங்குளம் |
| **Taluk** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 10.02.2026.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். நான் கொளத்தூர் மதுரா பொன்னங்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கை நடத்த எனது தகப்பனார் கோவிந்தராஜ் அவர்களுக்கு முகவராக பணியாற்றி வருகிறேன். மேற்படி தாவாவில் உள்ள சங்கதிகள் நிரூபணம் செய்யவேண்டி நிரூபண ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்கிறேன். நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனது தரப்பு ஆவணங்களான 06.11.1985 தேதியிட்ட ஆதிமூலக்கவுண்டர் மகன் குப்புசாமி கவுண்டருக்கு வட்டு கவுண்டர் மகன் சின்னத்தம்பி கவுண்டர் எழுதிவைத்த பதிவுசெய்யப்பட் கிரையப்பத்திரம் எண்.941/1985 அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆகும். 11.04.1988 தேதியிட்ட குப்புசாமி, கோவிந்தராஜ் ஆகிய எனது தகப்பனார் மற்றும் ரங்கநாதன் ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட

பதிவுசெய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திர எண்.41/1988 சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2 ஆகும். 26.09.2024 ம் தேதி பட்டா எண்.950 மற்றும் அ–பதிவேடு ஆன்லைன் நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3 ஆகும். அதே தேதியிட்ட பட்டா எண்.38 ஆன்லைன் நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.4 ஆகும். பட்டா எண்.949 மற்றும் அ–பதிவேடு தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.5 ஆகும். 30.09.2024 ம் தேதி கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் அலுவலக தலைமையிட துணை தாசில்தார் வழங்கிய பசலி 1419 முதல் 1429 வரை உள்ள அடங்கல் 11 எண்ணிக்கை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.6** ஆகும். 04.10.2024 ம் தேதியிட்ட கொளத்தூர் கிராம நிர்வாக அதிகாரி வழங்கிய பசலி 1431–1434 வரையான அடங்கல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.7** ஆகும். 11.01.2024 ம் தேதியிட்ட 1433 பசலிக்கு தாவா சொத்திற்கு வழங்கப்பட்ட நிலவரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.8** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>குறுக்குவிசாரணை-</u>

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கு இணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/– (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்